# அவசரப்படுவதைத் தவிர்ப்பீர்

ஹஜ்ரத் வலீத் பின் அஃகபஹ் (ர) அவர்களை இறைத்தூதர் ﷺ அவர்கள் பனூ முஸ்தலிஃக் வம்சத்தாரிடமிருந்து ஜ்ஸகாத் வசூலிப்பதற்காக அனுப்பிவைத்தார்கள். அந்த வம்சத்தினர் அவர்கள் வருவதைக்கண்ட போது அவரை வரவேற்பதற்காக முன்வந்தார்கள். அப்போது ஹஜ்ரத் வலீத் பின் அஃகபஹ் (ர) அவர்கள் இந்த மக்கள் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டு விலகிவிட்டதாகவும் தம்மைத் தாக்குவதற்காக முன்னேறுவதாக வும் நினைத்துவிட்டார்கள். இதன் காரணமாக அவர் உடனே மதீனாவுக்குத் திரும்பி வந்து இறைத்தூதர் ﷺ அவர்களிடம் விஷயத்தைக் கூறினார்கள். இந்த செய்தியின் அடிப்படையில் இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் க்ஹாலித் பின் வலீத் (ர) அவர்கள் தலைமையில் ஒரு படையினை அனுப்பிவைத்து அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள், நீங்கள், எவ்வகை யிலும் அவசரத்தைக் கடைபிடிக்காதீர்கள், நிலைமையை சீரான முறையில் ஆராய்ந்து பாருங்கள். ஹஜ்ரத் க்ஹாலித் பின் வலீத் (ர) அவர்கள் தன்னு டைய படையுடன் புறப்பட்டுச்சென்றார்கள் மற்றும் அங்கே சென்றடைந்த பின் நிலைமையை ஆராய்ந்துபார்ப்பதற்காக சிலரை பனூ முஸ்தலிஃக் வம்சத்தாரிடம் அனுப்பினார்கள். அவர்கள் திரும்பிவந்து கண்டறிந்த செய்தியைக் கூறினார்கள், அந்த மக்கள் மார்க்கத்தைவிட்டு விலகிவிட வில்லை, அவர்கள் பாங்கு சொல்கிறார்கள், தொழுகையை நிறைவேற்று கிறார்கள் மற்றும் இஸ்லாத்தைப் பின்பற்றுவதில் நிலைத்திருக்கிறார்கள் என்று. ஹஜ்ரத் க்ஹாலித் பின் வலீத் (ர) அவர்கள் மதீனாவிற்குத் திரும்பி வந்து இறைத்தூதர் ﷺ அவர்களிடம் உண்மை நிலையைப்பற்றி எடுத் துக்கூறினார்கள். அப்போது இந்த வசனம் அருளப்பட்டது:

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِن جَآءَكُمۡ فَاسِقُۢ بِنَبَإٖ فَتَبَيَّنُوٓاْ أَن تُصِيبُواْ قَوۡمَۢا بِجَهَٰلَةٖ فَتُصۡبِحُواْ عَلَىٰ مَا فَعَلۡتُمۡ نَٰدِمِينَ

٦ **(الحجرات:6)**

*பொருள்: இறைநம்பிக்கை கொண்டவர்களே, தீயவன் ஒருவன் ஏதேனும் ஒரு செய்தி உங்களிடம் கொண்டுவந்தால், அதன் உண்மை நிலையை நன்கு விசாரித்துத் தெளிவுபடுத்திக்கொள்ளுங்கள். நீங்கள் அறியாமலேயே ஒரு கூட்டத்தினருக்குத் தீங்கிழைத்துவிட்டு பின்னர் உங்கள் செயலுக்காக வருந்தும் நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. (அல் ஹுஜ்ராத் 6)*

இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு முறை இஸ்லாமிய மார்க்கத்தைவிட்டு விலகிவிட்ட ஒரு வம்சத்தினரை மீண்டும் நேர்வழியில் கொண்டுவருவதற் காக ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களை ஒரு படையுடன் அனுப்பி வைத்தார்கள். முஸ்லிம் படைவீரர்கள் அவர்கள்மீது தாக்குதல் நடத்தி

www.uzairfalahi.com

அவர்களைத் தோற்கடித்துவிட்டார்கள். போர் நடந்துகொண்டிருந்தபோது ஒருவன் ஓட்டம் பிடித்தான். ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களும் ஒரு அன்சாரியான நபித்தோழரும் அவனைப் பின்தொடர்ந்தார்கள். தப்பி ஓடிய அவன் இவர்களைப்பார்த்து தான் பிடிக்கப்பட்டு கொல்லப்பட்டு விடுவான் என்று எண்ணியவனாக உரத்தக் குரலில் لَآإِلَهَ إِلاَّ الله லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறினான். அன்சாரிகளான நபித்தோழர்கள் தாக்கு தலை நிறுத்திக்கொண்டனர், ஆனால், ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்கள் தான் கொல்லப்பட்டுவிடுவேன் என்று பயந்து لَآإِلَهَ إِلاَّ الله லாஇலாஹ இல்லல்லாஹ் கூறுகிறான் என்று நினைத்து அவனைக் கொன்றுவிட்டார்கள். அவர்கள் மதீனா திரும்பியபின் இந்த சம்பவத் தைப்பற்றிய செய்தி இறைத்தூதர் ﷺ அவர்களை எட்டியபோது அவர்கள் ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்களைப் பார்த்துக் கேட்டார்கள், ஓ உசாமாவே (ர), لَآإِلَهَ إِلاَّ الله லாஇலாஹ இல்லல்லாஹ் என்று கூறியபின்பும் அவனைக்கொன்று விட்டீரா? ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்கள் கூறினார்கள், இறைத்தூதரே ﷺ அவன் மரணத்தின் பயத்தால் கலிமா வைக் கூறினான். இறைத்தூதர் ﷺ அவர்கள் திரும்பத்திரும்ப ஓ உசாமாவே (ர) நீர் அவனைக்கொன்று விட்டீரா? ஓ உசாமாவே (ர) நீர் அவனைக் கொன்று விட்டீரா? என்று கேட்டுக்கொண்டிருந்த நிலையில் ஹஜ்ரத் உசாமா பின் ஜ்ஸைத் (ர) அவர்கள் கூறுகிறார்கள், என்னுடைய மனதில் இந்த நாளுக்கு முன்பே நான் முஸ்லிமாக ஆகாமலிருந்திருக் கக்கூடாதா என உறுத்திக்கொண்டிருந்தது (முஸ்லிம்).

இம்மாதிரியான ஒரு சம்பவம் பத்ரு யுத்தத்தின்போதும் நிகழந்தது. ஹஜ்ரத் சுஹைல் பின் அம்ர் (ர) அவர்கள் அதுவரை இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை, ஆகவே, கைதியாகப் பிடிக்கபட்டு மதீனாவுக்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் மிகுந்த சொல்லாற்றல் மிக்கவராக வும் சிறந்த பேச்சாளராகவும் இருந்தார்கள். அப்போது ஹஜ்ரத் உமர் ஃபாரூஃக் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் அனுமதி கேட் டார்கள், இறைத்தூதரே ﷺ இனிமேல் தன்னுடைய பேச்சாற்றலின் பலத்தினால் இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்குத் தீங்கிழைக்காதிருக்கும் வகையில் சுஹைலின் இரு முன் பற்களை உடைத்து விடுகிறேன். இறைத் தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் உமர் (ர) அவர்களை இவ்வாறு செய்வதி லிருந்து தடுத்துவிட்டுக்கூறினார்கள், அவரைச் செல்லவிடுங்கள். எதிர்க் காலத்தில் சுஹைலின் மூலமாக உங்களுக்கு மகிழ்ச்சி ஏற்படலாம். ஹஜ்ரத் சுஹைல் (ர) அவர்கள் மக்காஹ்வின் வெற்றிக்குப்பின் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள். இறைத்தூதர் ﷺ அவர்களின் மறைவுக்குப் பின்பு

www.uzairfalahi.com

மக்காஹ்வில் சிலர் இஸ்லாத்தைவிட்டு விலகிவிட நாடிய சமயத்தில் இதே ஹஜ்ரத் சுஹைல் (ர) அவர்கள் தன்னுடைய பேச்சாற்றலின் பலத்தினால் அவர்களை அவ்வாறு செய்வதிலிருந்து தடுத்துவிட்டார்கள்.

அவசரப்போக்கு மற்றும் உணர்ச்சிவசப்படுவது ஆகியவற்றின் நேர் எதிராக உறுதியாக நிலைத்திருத்தல், ஒன்றாகக்கூடி இருத்தல், தேக்கமான நிலை ஆகியன இஸ்லாமியப்பார்வையில் சிறந்த பண்புகளாகும். உறுதியான நிலைப்பாடு, நிதானம், கண்ணியமான அணுகுமுறை மற்றும் ஒன்றை உறுதியுடன் கடைபிடிப்பது ஆகியன ஒரு மனிதனுடைய மனநிலையின் பகுதியாகவே கருதப்படுகின்றன. ஒரு மூஃமின் எந்த ஒரு செயலைச் செய்தாலும் அவசரப்படாமல் நிதானமாக சிந்தித்து உறுதியுடனும் மனத்தூய்மையுடனும் செய்வான். ஹஜ்ரத் அலி (ர) அவர்கள் கூறுகிறார்கள், எப்போதும் ஒன்றைச் செய்வதானால் அவசரப்படாதீர்கள், மாறாக அதனை முறையாகச் செய்யுங்கள். மக்கள் அந்த வேலையை எவ்வளவு துரிதமாகச் செய்தீர்கள் என்று கேட்கமாட்டார்கள், மாறாக, எந்த அளவிற்கு சிறப்பான வகையில் செய்துள்ளீர்கள் என்றுதான் பார்ப்பார்கள். ஒரு அறிஞர் கூறுகிறார், யார் பதில் சொல்வதில் அவசரத்தைக் கடைபிடிக்கிறாரோ அவர் சரியான பதில் கொடுக்கும் வாய்ப்பினை இழந்தவிடுகிறார், யாரிடம் நிதானம் இருக்குமோ அவர் தன் குறிக்கோளை அடைந்துவிடுவார்.

ஒரு முஸ்லிமுடைய தொழுகையில் இறையச்சமும் மனத்தூய்மையும் அவர் அமைதியாகவும் கண்ணியமான முறையிலும் தொழுகையை நிறைவேற்றினால் மட்டும்தான் உண்டாகும். அல்லாஹ்விடம் துஆ கேட்கும்போது அல்லாஹ்வைப் புகழ்ந்து அவனுடைய மேன்மையை நினைவுகூற வேண்டும் மற்றும் இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது ஸலவாத்து ஓத வேண்டும். ஒரு முறை இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒருவரை துஆ செய்து கொண்டிருப்பதைச் செவியுற்றார், அவன் அதில் அல்லாஹ்வைப் புகழவுமில்லை இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது ஸலவாத்து ஓதவுமில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் அவரை நோக்கிக் கூறினார்கள், நீ அவசரத்தைக்கடைபிடித்துவிட்டாய். இறைத்தூதர் ﷺ அவர்கள் மற்றொரு தொழுகையாளியை துஆ செய்து கொண்டிருப்பதைச் செவியுற்றார்கள், அவர் அல்லாஹ்வைப் புகழ்ந்தும் இறைத்தூதர் ﷺ அவர்கள்மீது ஸலவாத்து ஓதியும் துஆ கேட்டுக்கொண்டிருந்தார். இறைத்தூதர் ﷺ அவர்கள் அவரை நோக்கிக் கூறினார்கள் **ادعُ تُجبْ، وسَلْ تُعْطَ** பொருள்: *நீ துஆ கேள் அது அங்கீகரிக்கப்படும். நீ கேள், கொடுக்கப்படுவாய்* (நிசாஇ).

துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதில் நாம் அவசரப்பட்டுவிடக்கூடாது, இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

www.uzairfalahi.com

لأحدكم مالم يعجل فَيَقُول رب قد دَعَوْت فَلم يستجب لي

*பொருள்:உங்களில் ஒருவர் இறைவனிடம் துஆ கேட்டு அவர் அதில் அவசரப்படாமலிருந்தாரேயானால் அல்லாஹ் அவருடைய துஆவை ஏற்றுக் கொள்கிறான். துஆ கேட்டு அதில் அவசரப்படுவது என்பது ஒருவர் இறைவனிடம் துஆ கேட்டு அதன்பின் நான் துஆ கேட்டேன் ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்று குறைகூறுவதாகும்.* (متفق عليه)

## அவசரப்படுவதைத் தவிர்ப்பதின் சிறப்பு

இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

السَّمْتُ الحَسَنُ، وَالتُّؤَدَةُ وَالاِقْتِصَادُ جُزْءٌ مِنْ أَرْبَعَةٍ وَعِشْرِينَ جُزْءًا مِنَ النُّبُوَّةِ

*நல்ல பண்புள்ள அணுகுமுறை, அவசரத்தைத்தவிர்த்தல் மற்றும் நடுநிலையான நிலை ஆகியன நபித்துவத்தின் இருபத்தி நான்கில் ஒரு பங்காகும்* (திர்மிதி). இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு நபித்தோழரிடம் கூறினார்கள் உங்களில் அல்லாஹ் விரும்புகின்ற இரண்டு பண்புகள் உள்ளன, ஒன்று சகிப்புத்தன்மை மற்றொன்று அவசரப்படாதிருத்தல் (முஸ்லிம்). மற்றொரு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது,

الأَنَاةُ مِنَ اللهِ وَالعَجَلَةُ مِنَ الشَّيْطَانِ

*அவசரமின்மை மற்றும் நிதானம் அல்லாஹ்வின் புறமானது வேகம் மற்றும் அவசரப்படுதல் ஷைத்தானின் புறமானது* (திர்மிதி). மனித வாழ்க்கையின் பொதுவான அனுபவம் என்னவெனில் அவசரப்படுவதினால் பெரும்பாலான காரியங்கள் கெட்டுவிடுகின்றன மற்றும் மனிதன் தான் விரும்புவதையும் செய்யமுடியாது இழப்புக்கு ஆளாகிவிடுகிறான்.

## நல்ல காரியங்களில் துரிதமாகச் செயல்படவேண்டும்

நல்ல காரியங்களில் அவசரப்படுவது நல்லதுதான், இங்கே அதனைத் தாமதப்படுத்துவது அல்லது தவிர்ப்பது நஷ்டத்தை ஏற்படுத்தும் விஷயமாகும். ஒரு மனிதன் தானம் அல்லது ஸதஃகா செய்ய நினைத்தால் அதனை உடனே செய்துவிடவேண்டும், யார் அறிவார்? மனமாற்றமும் ஏற்பட்டுவிடலாம், அந்த அடியானின் வசதி குறைந்துவிடலாம் அல்லது அதனைப் பெறுபவருடைய தேவை பூர்த்தியாகிவிடலாம், யாருக்குத்தெரியும் அவர் உயிருடன் இருப்பாரா இலையா என்று? இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்:

لتُّؤَدَةُ فِي كُلِّ شَيْءٍ إِلَّا فِي عَمَلِ الْآخِرَةِ

www.rizaifalahi.com

*பொருள்: மறுமைக்கான நற்காரியங்களிலெல்லாம் துரிதமாகச் செயல்பட வேண்டும் (அபூதாவூத்).* இவ்வாறே, இறைத்தூதர் ﷺ அவர்கள் நோன்பு திறப்பதில் அவசரம் காட்டவேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

**لايزال النَّاسُ بِخَيْرٍ مَا عَجَّلُوا الْفِطْرَ**

*பொருள்: என்னுடைய உம்மத்தினர் எதுவரை அவர்கள் நோன்பு திறப்பதில் அவசரத்தைக் கடைபிடிப்பார்களோ அதுவரை நலனுடன் இருப்பார்கள்.* **(متفق عليه)** இதன் பொருள் என்னவெனில் அவர்கள் நேரம் ஆகிவிட்ட பின் உடனே நோன்பைத்திறந்துவிடுவார்கள், தேவையற்ற தாமதத்தைத் தவிர்ப்பார்கள் என்பதாகும். இஸ்லாம் ஒரு முஸ்லிமுடைய பண்பினை எவ்வாறு வடிவமைக்கின்றது என்றால் அவர் நற்காரியங்கள் சுவர்க்கத்தினை அடைவதற்கான சிறந்த வழி என்ற வகையில் அதில் வேகத்தையும் இவ்வுலகத்னின் மற்ற காரியங்களில் அவசரப்பட்டு அதனைப் பாழாக்கி விடக்கூடாது அல்லது அச்செயலுக்காகக் கைசேதமும் வெட்கமும் ஏற்படக்கூடாது என்பதற்காக அவற்றில் எச்சரிக்கையான மற்றும் தள்ளிப் போடும் போக்கினையும் கடைபிடிப்பார். ஏனெனில், இதனால் ஒருவருடைய தனித்தன்மை தரக்குறைவானதாகவும் கீழ்த்தரமானதாகவும் அகிவிடும். அல்லாஹ் கூறுகிறான்:

وَسَارِعُوٓاْ إِلَىٰ مَغۡفِرَةٖ مِّن رَّبِّكُمۡ وَجَنَّةٍ عَرۡضُهَا ٱلسَّمَٰوَٰتُ وَٱلۡأَرۡضُ أُعِدَّتۡ لِلۡمُتَّقِينَ ﴿١٣٣﴾

**(الحجرات:6)**

*பொருள்: இறைவனிடமிருந்து வழங்கப்படும் மன்னிப்பு மற்றும் சுவனத்தின் பக்கம் செல்லும் பாதையில் விரைந்து செல்லுங்கள். அது வானங்கள் மற்றும் பூமியின் அளவிற்கு விரிவானது. மேலும் அது இறையச்சமுடையோர்களுக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.(ஆலு இம்ரான் 133)*

* * *

www.uzairfalahi.com